5me

For all Ceremonies
At your homes
Our Service available

OLI ILLAM

210, MAIN STREET,
(Near St. James Church)
JAFFNA.

நூலகம் மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்
-4-4-1994

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 22 திங்கட்கிழமை (04 - 04 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 128

தாரப் பந்தல், சதிரைகள்,
சில்வர் கப், பீங்கான்
இன்னும் பல
உபகரணங்களை
வாடகைக்கு பெற
நாடுங்கள்

"ஒலி இல்லம்"

210, பிரதான வீதி,
(யாழ்ப்பாணம் ஆலய மருங்கில்)
யாழ்ப்பாணம்

இந்த மண்ணை பற்றிநிற்கும் எம் மக்களுக்கு பேராசிரியர் ஊக்க சக்தியாக விளங்கினார்

துணைவேந்தர் துரைராசாவுக்கு விருது வழங்கி தலைவர் புகழாரம்

"எத்தனையோ அவலங்கள், துன்பங்கள் மத்தியிலும் எதற்கும் அஞ்சாத துணிவுடன் இந்த மண்ணைப் பற்றி நிற்கும் எமது மக்களுக்கு பேராசிரியர் துரைராசாஅவர்கள் ஓர் ஊக்க சக்தியாக விளங்கினார்; தளர்ந்து போகாத உறுதிப்பாட்டிற்கு ஓர் உன்னத உதாரணமாக விளங்கினார்."

— இவ்வாறு தலைவர் திரு. வே. பிரபாகரன் நேற்று பேராசிரியர் துரைராசா அவர்களுக்கு வழங்கப்பட்ட பிரிவுபசார வைபவத்தில் பேசும் பொழுது குறிப்பிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த தளபதிகளும், பொறுப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

தேசப்பற்றுடன் செயற்பட்டு, கல்வித் துறையின் மேம்பாட்டிற்கு அவர் ஆற்றிய அரும்பணியைப் பாராட்டிய தலைவர், பேராசிரியர் துரைராசா அவர்களுக்கு விசேட விருது ஒன்றை வழங்கிக் கௌரவித்தார்.

தலைவர் உரை

தலைவர் பிரபாகரன் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:-

என் அன்புக்குரியவர்களே!

சான்றோரைப் போற்றுவதும், கற்றோரை கௌரவிப்பதும் தமிழர்களாகிய எமது மரபு. எமது சீரிய பண்பாடு.

இந்தப் பண்புக்கமைய, பேராசிரியர் துரைராசா அவர்களை பாராட்டிக் கௌரவிப்பதற்காக நாம் இங்கு கூடியிருக்கிறோம்.

பேராசிரியர் துரைராசா அவர்கள் ஒரு தலைசிறந்த கல்விமான்; உலகப் புகழ்பெற்ற அறிஞர். ஆறு ஆண்டுகளாக, யாழ்ப்பாணப் பல்க

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஜனாதிபதி வேட்பாளராக ரணிலை நிறுத்த முயற்சி!

ஐ.தே.கவின் இன்றைய கூட்டத்தில் டி. பிக்கு எதிராக போர்க்கொடி

கொழும்பு, ஏப்ரல் 4

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக்குழு, செயற்குழு ஆகியவற்றின் கூட்டங்கள் இன்றும் நாளையும் நடைபெறும்போது கட்சித் தலைவரும் ஜனாதிபதியுமான டி. பி. விஜேதுங்காவுக்கு எதிரான கடும் போக்கு அங்கு எதிரொலிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் டிசம்பருக்கு முன்னர் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் டி. பிக்கு பதிலாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை கட்சியின் வேட்பாளராக நிறுத்தச் செய்வதற்கும் —

அது சம்பந்தமான பிரேரணையை இக்கூட்டங்களில் நிறைவேற்றி, அது பற்றிய அறிவிப்பை உடன் வெளியிடச் செய்வதற்கும் —

டி. பி. விஜேதுங்கவுக்கு எதிரான குழு மும்முரமாக முயன்று வருகிறது.

அண்மையில் தென்மாகாணத்தில் ஆளும் கட்சிக்கு ஏற்பட்ட படுதோல்வியையடுத்து ஐக்கிய தேசியக் கட்சிக்குள் தலைமைக்கான பதவிப் போட்டி ஏற்பட்டிருப்பது தெரிந்ததே.

தேர்தல் தோல்வியைத் தொடர்ந்து ஜனாதிபதியை கடுமையாக விமர்சித்து வரும் ரணில் — சிறிசேன கூரே குழுவினர் விஜேதுங்கவுக்கு எதிராக கட்சிக்குள் ஆதரவு திரட்டி வருகின்றனர்.

எதிரணி தரப்பில் ஜனாதிபதி வேட்பாளராக சந்திரிகா குமாரதுங்க போட்டியிடக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதால் அவருக்கு எதிரான போட்டி வேட்பாளராக செயற்பட்டு சமாளித்து, வெற்றிபெறும் தகைமை ஐ.தே. கவில் ரணிலுக்கே உண்டு என இக்குழு வலியுறுத்தி வருகிறது.

இந்த ஆண்டு ஆரம்பத்தில் ஐ.தே. கவின் வருடாந்த மாநாட்டில் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் டி. பி. விஜேதுங்கதான் என அறிவிக்கப்பட்டது. அதை மாற்றும் முயற்சியில் ரணில் குழுவினர் ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது. (உ-3-6)

இங்கேயே பாலில் இருந்து "சீஸ்" தயாரிக்க முடியும்

யாழ்ப்பாணம், ஏப். 4

பாலில் இருந்து ''சீஸ்'' தயாரிப்பது தொடர்பாக யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடம் மேற்கொண்ட ஆய்வு வெற்றி பெற்றுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

சோளம், அரிசி ஆகியவற்றில் இருந்து தயாரிக்கப்படும் ஒருவகை நொதியத்தைப் பயன்படுத்தி பாலில் இருந்து 'சீஸ்' தயாரிக்க முடியும் என்று கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நொதியத்தின் மூலம் பாலில் இருந்து 'சீஸை' பிரித்து எடுத்து விட்டு மீதியில் இருந்து ''இலக்றிக் அஸிட்'' தயாரிக்க முடியும் என்றும்—

''இலக்றிக் அஸிட்டை'' சோடா தயாரிப்புக்கு பயன்படுத்த முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

விதை உருளைக்கிழங்கும் இங்கு தயாரிக்கத் திட்டம்

அமெரிக்க பல்கலைக்கழகம் உதவும்

யாழ்ப்பாணம், ஏப். 4

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் விதை உருளைக்கிழங்கிற்குப் பதிலாக அதே தரத்தில் விதை உருளைக்கிழங்கை இங்கேயே தயாரிக்கும் திட்டத்துக்கு உதவ அமெரிக்காவில் உள்ள ஒரு பல்கலைக்கழகம் முன்வந்திருக்கிறது.

அமெரிக்காவில் உள்ள மிக்ஸிக்கன் மாநில பல்கலைக்கழகமே உதவ முன்வந்திருக்கிறது.

உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம் போன்ற பயிர்களுக்குத் தேவையான விதைகளை இழைய மற்றும் கல வளர்ப்பின் மூலம் மேற்கொள்ளும் திட்டத்துக்கே அந்த பல்கலைக்கழகம் உதவ முன்வந்துள்ளது.

இந்த வேலைகளைச் செய்ய யாழ்ப்பாணத்தில் ஆய்வு நிலையம் ஒன்றை அமைக்கவும் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

(3 ஆம் பக்கம் பார்க்க)

தீர்வுக்கு முன்முயற்சியாக

சர்வமதக் குழுவினர் பிக்குமாருடன் பேச்சு!

கொழும்பு, ஏப். 4

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முன்முயற்சியாக யாழ்ப்பாணம் வந்து விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்திய சர்வமதக் குழுப் பிரதிநிதிகள், கடந்த வாரம் கொழும்பில் உயர்மட்ட பௌத்த பிக்குமார்களுடன் பேச்சுக்கள் நடத்தியதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

மேற்படி சர்வமதக் குழுவில் அங்கம் வகிக்கும் அங்கிலிக்கன் ஆயர் வண. கெனத் பெர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

கல்வித்துறை சிற்றூழியர் தெரிவு:

நேர்முகப்பரீட்சை முடிவுகள் ரத்துச் செய்யத் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஏப். 4

யாழ். மாவட்ட பாடசாலைகளில் உள்ள சிற்றூழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக கடந்த வருட இறுதியில் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைகளை ஏற்பதில்லை என்றும்—

அந்தப் பரீட்சை முடிவுகளை ரத்து செய்வது என்றும் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சு முடிவு செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

பாடசாலைகளில் உள்ள சிற்றூழியர் வெற்றிடங்களை நிரப்ப யாழ். கல்வி அலுவல

(4 ஆம் பக்கம் பார்க்க)

கோமல் சுவாமிநாதன் யாழ்ப்பாணம் வருகை

யாழ்ப்பாணம், ஏப். 4

தமிழகத்தைச் சேர்ந்த பிரபல நாடக ஆசிரியரும், 'சுபமங்களா' சஞ்சிகையின் ஆசிரியருமான கோமல் சுவாமிநாதன் யாழ் [illegible] ளார்.

மூன்று நாள் [illegible] மாக இங்கு வந்துள்ள திரு. சுவாமிநாதன், பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள இருக்கிறார்.

இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு யாழ். பல் [illegible]

காமினிக்கு அமைச்சர் பதவி?

ஆளும் கட்சிக்குள் தமது நிலையை ஸ்திரப்படுத்த முயற்சித்து வரும் ஜனாதிபதி விஜேதுங்க அதன் ஒரு நடவடிக்கையாக —

கட்சிக்குள் அண்மையில் வந்து மீண்டும் சேர்ந்த காமினி திஸநாயக்காவை நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்க முயற்சித்து வருவதாகக் கூறப்படுகிறது.

இவ்வாறு இறுதியில் அவர் அமைச்சராக நியமிக்கப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (உ-3-6)

சிறிசேன கூரேக்கு கல்தா?

ஜனாதிபதி விஜேதுங்க கட்சியில் தமக்கு எதிரானபோக்கை சமாளிக்கும் வகையில் தமக்கு எதிரானவர்களை கட்சியில் செல்லாக் காசாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

அதன் ஒரு கட்டமாக —

கட்சிக்குள் தம்மை எதிர்க்கும் அணியின் முக்கிய பிரமுகரான, சிறிசேன கூரேயை கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்தும் அமைச்சர் பதவியிலிருந்தும் அகற்றுவது குறித்து ஜனாதிபதி ஆலோசித்து வருவதாக பி.பி.ஸி. குறிப்பிட்டது. (உ-3-6)

ஹேமாவை தலைவராக்கவும் கட்சிக்குள் ஒரு சாரார் திட்டம்

ஜனாதிபதி பிரேமதாஸா கடைப்பிடித்து வந்த ஜனரஞ்சகமான கொள்கையில் இருந்து ஜனாதிபதி விஜேதுங்காவும், கட்சியும் விலகி வந்ததுதான் கடைசி தென்மாகாணத் தேர்தலில் படுதோல்வியடைந்ததற்குக் காரணம் என ஆளும் கட்சியில் ஒரு சாரார் கருதுவதாக பி. பி. ஸி. அறிவித்தது.

இந்தக் கருத்து கட்சிக்குள் வலுத்து வருவதால் —

இழந்த செல்வாக்கை மீண்டும் பெற பிரேமதாஸாவின் மனைவி திருமதி ஹேமா பிரேமதாஸா, அவரது மகன் ஆகியோரை கட்சியின் தலைமைப் பதவிக்குக் கொண்டு வரவும் திரைமறைவில் தீவிர முயற்சி எடுக்கப்பட்டு வருவதாக மற்றொரு செய்தி குறிப்பிட்டது. (உ-3-6)

தொண்டமானைச் சமாளிக்க ஜே.ஆர். குழுவினர் முயற்சி!

ஜனாதிபதி விஜேதுங்கவுடன் ஏற்பட்ட கருத்துவேறுபாடுகளை அடுத்து ஆளும் ஐ.தே. கவிலிருந்து சற்று விலகி நிற்கும் இ.தொ. கா. தலைவர் எஸ். தொண்டமானை சமாளித்து மீண்டும் ஆளும் கட்சிக்கு அவரது ஆதரவைப் பெற்றுக் கொடுக்க திரைமறைவில் முயற்சிகள் நடைபெறுவதாக அறிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்தனாவும் மற்றும் ஆளும் ஐ. தே. கவின் முக்கிய உறுப்பினர்களும் தொண்டமானைச் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள்.

ஜனாதிபதி விஜேதுங்க நாட்டின் இனப்பிரச்சினை தொடர்பாக சிங்கள இனவாதக் கொள்கையை ஒரேயடியாக மேற்கொண்டதால் தான் அண்மைக்காலமாக அவருக்கும், தொண்டமானுக்கும் இடையிலான உறவுகளில் விரிசல் ஏற்பட்டது.

சிறுபான்மை தமிழரின் வாக்குகளை இழந்து விட்டால், ஜனாதிபதி தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் ஐ. தே. க. தோல்வியடைவது உறுதி என்று கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் அஞ்சுவதாகக் கூறப்படுகிறது.

ஆகவே தொண்டமானை தாஜா செய்து, ஆளும் கட்சியின் முழு ஆதரவாளராக மீண்டும் அவரை மாற்ற ஒற்றைக்காலில் நின்று வருவதாகக் கூறப்படுகிறது. (உ-3-6)

பேச்சுமூலம் தீர்வுகாண பிரி. அரசு உதவ வேண்டும்

செனட் சபையில் பிரஸ்தாபம்

யாழ்ப்பாணம், ஏப். 4

"இலங்கையில் உள்நாட்டுப் போருக்கு பேச்சு வார்த்தை மூலம் இணக்கமான தீர்வு ஒன்றைக் காண்பதற்கு பிரிட்டிஷ் அரசாங்கம் அதன் நல்லெண்ணத்தை பயன்படுத்த வேண்டும்.

—இவ்வாறு இங்கிலாந்தின் ஹரியன் நகர மேயர் சின்ன மணி பிரிட்டிஷ் அரசைக் கேட்டுள்ளார் என்றும் அறிவிக்கப்படுகிறது.

பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் மக்கள் பிரதிநிதிகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முனி



அப்ப... உவர் டி. பியாருக்கு சனி பிடிச்சிட்டுது என்டு சொல்லுங்கோ......!

வடக்கே பொருள்களை அனுப்பினார்!

பிரிகேடியர் விஜேசேகரா இராணுவ விசாரணையில்!

ஓய்வு பெற்ற பிரிகேடியர் தயா விஜேசேகரா இராணுவ விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

சேவையில் இருந்தபோது தடை செய்யப்பட்ட பொருள்களை வடபகுதிக்கு எடுத்துச் செல்ல வழிவகை செய்ததன் மூலம் தனது உத்தியோக பூர்வ பதவியை துஷ்பிரயோகம் செய்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ள அவர், விரைவில் இராணுவ நீதிமன்ற விசாரணைக்குள்ளாக்கப்படவிருப்பதாக கொழும்பில் நேற்று வெளியான அரச சார்பு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (உ-5)

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

சகல வசதிகளுடன் கூடிய 7 அறைகள் கொண்ட வீடு உடன் விற்பனைக்கு உண்டு. காணி 8½ பரப்பு. க. பவளபூஷணம் 99, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம். (7174)

கறவை நிலையிலுள்ள நல்லின ஆடு இரண்டு குட்டிகளுடனும், கிடாய் சனும் பருவ ஆடும் விற்பனைக்கு உண்டு. க. செல்வநாயகம், சிவகுல வீதி, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய். (30222)

நல்ல நிலையில் Indian Raleigh Cycle விற்பனைக்கு உண்டு. இல. 8, ஓவசியர் லேன் (தட்டாதெரு), யாழ்ப்பாணம். (30223)

விற்பனையாகிறது

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் வரிமுறை வர்த்தக நிறுவனங்கள் விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (வி/7475)

கோழிக்குஞ்சு விற்பனை

Prima Broiler குஞ்சுகள் உடன் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (30225)

தவறிவிட்டது

த. 2-9918 இலக்க மோட்டார் சைக்கிள் புத்தகமும், காணி உறுதியும், சாவகச்சேரிக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையில் 2-4-94 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து விசயன் ஸ்ரோர்ஸ், கண்டி வீதி, சாவகச்சேரி (பழைய பொலிஸ் நிலையம் முன்பாக) என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (30213)

தொழில்நுட்ப கல்லூரி பரீட்சை முடிவு

யாழ்ப்பாணம், ஏப். 4

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெற்ற 1992 ஆம் கல்வி ஆண்டிற்கான இறுதிப் பரீட்சைப் பெறுபேறுகளை பரீட்சைத் திணைக்களம் அனுப்பி வைக்க ஆரம்பித்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

படம் வரை பயிலுநர், பொறிப்பொருத்தல், மின் இணைப்பு, வியாபார கற்கைகளுக்கான தேசிய தராதரப் பத்திரம் ஆகிய பரீட்சை முடிவுகள் பரீட்சைத் திணைக்கள உத்தியோகத்தர் திரு. ஏ. சுப்பிரமணியத்தால் இங்கு எடுத்துரைப்பட்டன. (த)

மாணவர் உணவு முத்திரை

திருநெல்வேலி, ஏப் 4

1993 ஆம் ஆண்டின் இறுதி மூன்று மாதங்களுக்குரிய மாணவர்களுக்கான உணவு முத்திரைகள் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 40 கிராம அலுவலர் பிரிவிலும் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (த-143)

அன்னை பூபதி நினைவு சிரமதானம்

யாழ்ப்பாணம், ஏப். 4

அன்னை பூபதி நினைவாக நடைபெற்று வரும் சிரமதான நிகழ்வுகளில் இன்று கொடிகாமம் வட்டத்தில் நகரை அண்மித்த பகுதிகள் துப்புரவு செய்யப்படும். (த)

கொக்குவில் மேற்கு

ஸ்ரீ வராகி அம்பாள் கோவில் மஹோற்சவ விஞ்ஞாபனம்

(கொடியேற்றம்)

அம்பிகை அடியார்களே!

நாளை **05 - 04 - 1994**

செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் மஹோற்சவம் நடைபெறும்.

13 — 04 — 1994 சப்பரத் திருவிழா
14 — 04 — 1994 ரதோற்சவம்
15 — 04 — 1994 தீர்த்தோற்சவம்
16 — 04 — 1994 பூங்காவனத் திருவிழா

மஹோற்சவ கால கம்பராமாயண இலக்கியப் பேருரை

நிகழ்த்துபவர்:

"கம்ப கலா சுரபி"

திரு. த. சிவகுமாரன்

(அமைப்பாளர் காரைநகர் கம்பன் கழகம், ஆசிரியர் யாழ். இந்துக் கல்லூரி)

விடயம்:

கம்பராமாயணம்

தினமும் — மாலை 6 மணி முதல் 7 மணி வரை.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!

திரு மா. பரமேஸ்வரன்,
ஆலய முகாமையாளர்.

[30224]

ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்
பருத்தித்துறை

ஸ்ரீராம கிருஷ்ண - விவேகானந்த 9ஆவது புத்தகக் கண்காட்சி

இடம்: சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயம்
காலம்: 06 — 04 — 1994 புதன்கிழமை
நேரம்: காலை 9மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை

திருமதி பு. கணேசலிங்கம்
(பிரதிக் கல்விப்பணிப்பாளர், தென்மராட்சிக் கோட்டம்)
அவர்கள்

ஸ்ரீராமகிருஷ்ண - விவேகானந்த புத்தகக் கண்காட்சியைத் திறந்து வைப்பார்.

தென்மராட்சி வாழ்மக்கள் புத்தகக் கண்காட்சியை பார்வையிட்டும் நூல்களை வாங்கியும் ஆதரவு தருக!

[வி-7671]

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
20
—
05
—
1941

மறைவு:
16
—
03
—
1993

திருமதி பாக்கியம் சிவசுப்பிரமணியம்

திதி: **04 - 04 - 1994**

அன்பின் உருவமாய், பாசத்தின் சிகரமாய், எங்கள் குடும்ப ஒளிவிளக்காய் எம்மைப் பண்போடும் பாசத்தோடும் வாழவைத்த அன்புத் தெய்வமே! ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டு ஓராண்டு மறைந்தாலும், பாச நினைவு எங்கள் நெஞ்சங்களில் என்றும் நீங்காது. தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;

அன்புக் கணவன், மகள்.

சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.

[30200]

NATIONAL CERTIFICATE IN ENGLISH

(N. C. E.) PART - I
EXAMINATION IN 1994 MAY

CLASSES ON MONDAYS AND FRIDAYS 3 to 4-30 p m.

Commencement: **28 - 03 - 1994**

Lectures: **KANDIAH NAVARENDRAN**

JAFFNA ENGLISH ACADEMY
27, RAKKA LANE, CHUNDIKULI, JAFFNA.

(C-767[illegible])

விதை உருளைக்கிழங்கு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாரம் அமெரிக்கா செல்லவிருக்கும் யாழ். மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் எஸ். பாலசுப்பிரமணியம் அமெரிக்க பல்கலைக்கழகத்துடன் இது குறித்து பூர்வாங்க பேச்சுக்களை நடத்தவிருக்கிறார். (உ-8)

"தேவாரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்"

யாழ்ப்பாணம் அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தின் 36 ஆவது ஆண்டு தமிழ் இசை விழா

இடம்: நல்லூர் பண்டாரக்குளம் மருதவளவு விநாயகர் ஆலய முன்றில்

காலம்: **01 - 04 - 1994** முதல் **15 - 04 - 1994** வரை

04 — 04 — 1994 திங்கட்கிழமை

நான்காம் நாள் நிகழ்ச்சிகள்

மாலை 7-00 மணி

அ. இ. த. ம. மாணவிகள்
செல்வி இராதாதேவி சுவாமிநாதன் மாணவிகள்] - பாட்டு

7-30 மணி

திரு. இ. திருஞானசம்பந்தர் — [illegible]
திரு. எஸ். சந்திரநாதன் — வயலின்
திரு. எஸ். துரைராசா — மிருதங்கம்

8-15 — 9-30 மணி

செல்வி கனகாம்பிகை பத்மநாதன் — பாட்டு
திரு. உ. இராதாகிருஷ்ணன் — வயலின்
திரு. க. கண்ணதாசன் — மிருதங்கம்
திரு. சதா. வேல்மாறன் — கடம்

வாழ்த்துபவர்கள்:

C. C. C. கிளினிக்
சிற்றி கிளினிக்கல் கொன்சல்டேசன்ஸ்
சுபாஸ் இல்லம்,
விக்டோரியா வீதி, யாழ்ப்பாணம்.

சகல மருத்துவ ஆலோசனைகளுக்கும் மருத்துவ நிபுணர்களை சந்திக்க நகரில் முதன்மையான நிறுவனம்.

[சி-7656]

பேராசிரியர் அ. துரைராசா

அவர்களின்

மணிவிழா ஒழுங்குகள்

பேராசிரியர் அ. துரைராசா அவர்களின் மணிவிழாவை சிறந்த முறையில் நடத்தும் பொருட்டு பின்வருவோரைக் கொண்ட ஒரு மணிவிழா செயற்பாட்டுக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

01. ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் (நல்லை ஆதீன முதல்வர்)
02. செந்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி (துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை)
03. மகாராஜஸ்ரீ கு. சண்முகநாதக் குருக்கள் (மாவை ஆதீன முதல்வர்)
04. வணபிதா இம்மானுவல் அடிகளார்
05. அதி வணக்கத்துக்குரிய கலாநிதி ஜெபநேசன் (யாழ். மேற்றிராணியார்)
06. அகில இலங்கை கம்பன்கழக அமைப்பாளர் இ. ஜெயராஜ் அவர்கள்
07. திரு. கா. மாணிக்கவாசகர் அவர்கள் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)
08. பேராசிரியர் அ. சண்முகதாஸ் (தலைவர் / யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்)
09. திரு. ச. க. தனேந்திரன் (தலைவர் / யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம்)
10. திரு. இ. எமில் (தலைவர் / மாணவர் பேரவை யாழ். பல்கலைக்கழகம்)
11. திரு. க. தேவராஜா (பொருளாளர், யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்)
12. திரு. க. வை. சற்குணம் (மித்திரன் யாழ்ப்பாணம்)
13. திரு. இ. அழகரத்தினம் (நியூரோன் எலெக்ரிக்கல்ஸ் யாழ்ப்பாணம்)
14. திரு. க. சோமசேகரம் (மகாராணி புடவை மாளிகை யாழ்ப்பாணம்)
15. கலாசூரி என். கே. பத்மநாதன் (நாதஸ்வர மேதை)
16. திரு. பொன். சுந்தரலிங்கம் (சங்கீத பூஷணம்)

மேற்படி குழுவின் கூட்டமொன்று நல்லை ஆதீன மகா மண்டபத்தில் மிக விரைவில் கூட்டப்பட இருக்கின்றது. அதற்கான திகதியும் நேரமும் குழுவினர்களுக்கு தனித்தனியாக அறியத்தரப்படும்.

நன்றி
மணிவிழாக் குழு சார்பாக

இ. ஜெயராஜ்
அகில இலங்கை கம்பன்கழக அமைப்பாளர்.

ச. க. தனேந்திரன்,
தலைவர்,
யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம்.

[சி-7672]

அண்ணாவிமார் கௌரவிப்பும் பரிசில் வழங்கலும்

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் மரபுவழி

* நாட்டுக்கூத்து * இசைமரபு நாடகங்களை

மேடையேற்றும் அண்ணாவிமார்களை

1995 இல் கௌரவித்து பரிசில் வழங்கவுள்ளது

அதனோடு அன்றைய கௌரவிப்பு விழாவிலே அவர்களினால் தயாரிக்கப்பட்ட **கூத்துக்களையும், இசை நாடகங்களையும் மேடையேற்றவுள்ளது**

விதிகள்:

1. நாட்டுக்கூத்துக்களிலோ இசைமரபு நாடகங்களிலோ மேடையேற்றும் நடிகர்களில் 80 வீதமானோர் 25 வயதிற்குட்பட்ட இளைஞர், யுவதிகளாகவே இருக்க வேண்டும்.
2. நிகழ்வு 1 மணி 30 நிமிடத்துக்கு குறையாததாக இருக்க வேண்டும்.
3. சித்திரை 94 இற்கும் மார்கழி 94 இற்கும் இடைப்பட்ட காலத்தில் மேடையேற்றப்படும் கூத்துக்களும், இசைமரபு நாடகங்களும் மட்டும் அண்ணாவிமார் கௌரவிப்புக்கும், பரிசில் வழங்கலுக்கும் எடுத்துக் கொள்ளப்படும்.
4. நாட்டுக்கூத்து, இசைமரபு நாடகங்களின் வடிவங்களின் மூலம் சமகாலப் பிரச்சினைகளை வெளிக் கொணரும் (நிகழ்வுகளும்) கூத்துக்களும், நாடகங்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

* எனவே மேற்படி நிகழ்ச்சிகளை மேடையேற்றும் அண்ணாவிமார்கள் தமது நிகழ்வுகளை எமது கழகத்திற்கு அறிவிக்குமிடத்து எமது கழகத்தின் பிரதிநிதி ஒருவர் அந்நிகழ்வின் பார்வையாளராக பங்குகொண்டு அண்ணாவியாரின் பெயரையும், நாட்டுக்கூத்து, இசைமரபு நாடகத்தின் பெயரையும் பதிவு செய்து கொள்வார்.

* எனவே இம்முயற்சியில் திறமைமிக்க, வளம்கொண்ட நெறியாளர்கள், தயாரிப்பாளர்கள், அண்ணாவிமார்கள் ஈடுபட்டு எமது பாரம்பரிய கலைவடிவத்தை இளைஞர் மட்டத்தில் வளர்க்கும்படி அன்பாய் வேண்டுகின்றோம்.

தொடர்பு முகவரி:

செ. மெற்றாஸ்மயில்,
செயலாளர்

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்
865, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்,

இப்படிக்கு
பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்

விளம்பர அன்பளிப்பு:

ஜெயச்சித்ரா நகை மாளிகை
177 B. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம். (சி-7675)

உதயன்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

டி. பியாரின் முடிவு காலம்?

இனப்பிரச்சினை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்பட வேண்டும் என்று அரசாங்கமும் எதிரணியும் கூறுகின்றன. ஆனால் தீர்வுக்கான திட்டம் எதனையும் அவர்கள் சமர்ப்பிக்கவில்லை. பேச்சுவார்த்தைகளுக்கான எவ்வித முயற்சியையும் மேற்கொள்வதாகவும் இல்லை.

பி. பி. ஸிக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் சமாதானவாதி அத்துலத் முதலி மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

அத்துலத் முதலி மூத்த, மூத்த அரசியல்வாதி. டட்லி சேனநாயக்கா அரசாங்க காலத்திலேயே அமைச்சரவை பணிபுரிந்தவர். அவர் இன்னமும் [illegible] அரசியல் அமைப்பில், டி.யு.என்.எவ். கட்சியின் தலைவராக இருந்த ஐக்கிய தேசியக் கட்சியுடன் மிக நெருக்கமாக உழைத்தவர். அதன் நீண்ட கால உறுப்பினரும் செயலாளரும் மிக்க தலைவராகவும் விளங்கியவர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் அத்துலத் முதலி சேர்ந்திருந்த காலத்தில், முக்கியமாக அக்கட்சியில் இருந்த சேர்க்கையை குறிப்பிட்டு உழைத்தவர். அதனால் அந்தக் கட்சியின் உள்ளும் புறமும் தெரிந்து வைத்திருந்தவர்.

இப்போதும் சமாதானவாதி பதவி வகிப்பதால் அரசையும், எதிரணியையும், அவற்றின் போக்கையும், அக்கட்சியைச் சேர்ந்த எம்.பிக்களின் போக்கையும், நடத்தையையும், திறமையையும் நன்றாகத் தெரிந்தவர்.

அதனால் அரசாங்க, எதிரணிகள் இனப்பிரச்சினையைத் தீர்க்கும் விடயத்தில் எங்கேயே, என்னென்ன கோணங்களில், கோலங்களில் திரிகின்றன என்பதனை வேறு எவரையும் விட அறியும் வாய்ப்பு அவருக்கு அதிகம் உண்டு. மேலும் அவரும் பிரதான இனம் ஒன்றைச் சேர்ந்தவர் என்பதால் பாதிக்கப்பட்டவர்களின் பக்கத்தில் நின்று பார்க்கும் ஆர்வமும் மனமும் அவரிடம் நிச்சயம் இருக்கும் என்பதும் நிச்சயம்.

பிரேமதாஸ ஆட்சியின் — இன்றைய தலைவர்களின் — அதுவும் ஜனாதிபதி விஜேதுங்காவின் — போக்கு அறிந்து தான் இனப்பிரச்சினை சம்பந்தமான சமாதானப் பேச்சுக்கான சூழ்நிலையை ஏற்படுத்த அவர் முனைந்தார். விடுதலைப் புலிகளுடன் பேசாமல், இருதரப்பும் பேச்சுக்கான சூழ்நிலையையும், ஏன் தீர்வையும் உருவாக்க முடியாது என்ற யதார்த்தத்தை உணர்ந்தார். விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்காக யாழ்ப்பாணம் வருவதற்கு ஆயத்தமானார்.

ஆனால் விஜேதுங்கா அதனைத் தடுத்து விட்டார். அது மட்டுமா? அமைச்சர்கள், அரச எம். பிக்கள் எவரும் தமது அனுமதியின்றி விடுதலைப் புலிகளுடன் பேசக்கூடாது என்று தடையும் விதித்து விட்டார்.

அதாவது சமாதானப் பேச்சுக்கான கதவை முற்றாக மூடி, திறப்பைத் தானே எடுத்துச் சொருகிக் கொண்டு விட்டார். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைத் தாம் அனுமதிக்கப் போவதில்லை. போரையே நடத்தி நாட்டின் அழிவைத் தொடரப் போகிறார் என்பதனை அவர் உலகத்துக்கும் நிரூபித்து விட்டார்.

ஆனால் தடை போட்ட விஜேதுங்கா இன்னும் எத்தனை நாட்களுக்கு பதவியில் இருப்பார் என்பது இன்று தெரிந்ததே. அவர் இருக்கப்போவது அனேகமாக சில காலம் என்பதால் தான் சமாதானவாதி, "ஸ்ரீலங்காவிலும் இன்று வரை வெற்றியின் பின் நான் யாழ்ப்பாணம் வருவேன்" என்று நம்பிக்கையுடன் அறிவித்திருக்கிறார் போலும்! முதலமைச்சர், தொண்டமான் ஆகியோரின் ஆதரவு ரணிலுக்கு கிடைத்தால் விஜேதுங்கா வீழ்ந்து படுவார். எப்படியோ அவரது முடிவு காலம் நெருங்கி வருகிறது.

மன்னாருக்கு மின் விநியோகம் மீண்டும் ஆரம்பிக்க உத்தரவு

ஹமில்டன் வனசிங்கா விடுத்தார்

கொழும்பு, ஏப். 4

யுத்த நிலைமை காரணமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த மன்னாருக்கான நீர் மின்சார விநியோகத் திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்குமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வனசிங்கா உத்தரவிட்டுள்ளார்.

முதலில் மடுவுக்கும், பின்னர் அவசியத் தேவைக்கு முன்னுரிமை கொடுத்து ஏனைய இடங்களுக்கும் நீர் மின் விநியோகம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் பணித்துள்ளார்.

மதவாச்சியில் இருந்து செட்டிகுளம் ஊடாக இந்த மின் விநியோகம் இடம் பெறும்.

இப்பணியில் இலங்கை மின்சாரசபையின் வவுனியாப் பகுதி ஊழியர்கள், அதிகாரிகள் ஈடுபடுவர்.

இவ் வருடமிறுதிக்கு முன் மன்னாருக்கு நீர்மின் வழங்க மின்கம்பங்கள் அமைக்கப்பட்டு இடைநிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

தமிழிசை விழாவில் இன்று

யாழ்ப்பாணம், ஏப். 4

யாழ்ப்பாணம் அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தின் தமிழிசைவிழாவில் இன்று திரு. இ. திருஞானசம்பந்த[illegible], செல்வி ம. [illegible] இடம்பெறும். (உ-111)

வடக்கே வந்த லொறியில் 45 லட். ரூபா பணம் பதுக்கல்

கொழும்பு, ஏப். 4

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு லொறியில் ஏற்றி வரப்பட்ட தேங்காய்எண்ணெய்ப் பரல்களில் ஒன்றினுள் 45 லட்சம் ரூபா பணம் மறைத்து வைக்கப்பட்டிருந்த சம்பவம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளுக்கு என்று சேர்க்கப்பட்டதாகக் கூறப்படும் 45 லட்சம் ரூபா பணமே இவ்வாறு யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் இரகசிய தகவல் ஒன்றைத் தொடர்ந்தே, அதனைக் கண்டுபிடிக்க பாதுகாப்பு அதிகாரிகள் குழு ஒன்று வவுனியாவுக்கு அனுப்பப்பட்டிருந்தது என்று சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இச் சம்பவம் பற்றி பாதுகாப்பு அதிகாரிகள் விசாரணை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-ஈ-6)

கட்டுப்பாடு நீக்கப்பட்டது

கொழும்பு, ஏப் 4

சர்வதேச செலாவணி பரிமாற்றம் தொடர்பான எஞ்சியிருக்கும் சகல நாணயப் பரிமாற்றக் கட்டுப்பாடுகளையும் மத்திய வங்கி அகற்றி உள்ளது. இது உடனடியாக அமுலுக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ-9)

நாளை

யாழ். இந்துக் கல்லூரியின் கையெழுத்துப் பிரதி வெளியீட்டு விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும். (த-103)

★ ★ ★

யாழ். மாவட்ட வணிக வள நிலையத்தின் "வளம்" மலர் வெளியீட்டு விழா நாளை செவ்வாய் பிற்பகல் 3 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் திரு. ஆர். வரதராசா (திட்டமிடல் அலுவலர் யாழ். 3) தலைமையில் நடைபெறும்.

கோட்டையில் கைதான தமிழ் மாணவர் மீது வழக்கு

கொழும்பு ஏப். 4

வைத்திய சிகிச்சைக்காக கொழும்புக்கு வந்தவேளை கோட்டை ரயில் நிலையத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட யாழ்ப்பாணம் இணுவிலைச் சேர்ந்த மகாலிங்கம் திருக்குமரன் (வயது 19) என்ற மாணவர் மீது சட்டமா அதிபர் வழக்குத் தொடுத்துள்ளதாக கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

தடுப்புக்காவல் உத்தரவின் பேரில் மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இவரை ஏப்ரல் 21ஆம் திகதி மேல் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாணவரின் விடுதலை தொடர்பாக அவரது மாமியாரான திருமதி [illegible] இரத்தினேஸ்வரி மேன்முறையீட்டு நீதிமன்றில் ஆட்கொணர்வு மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். [த-5]

இடம்பெயர்ந்த மாணவருக்கு பாடசாலை உபகரணம்

இம் முறையும் "யுனிசெப்" வழங்கும்

யாழ்ப்பாணம், ஏப். 4

இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியிருக்கும் பாடசாலை மாணவர்களுக்கு சென்ற வருடத்தை போன்று இம்முறையும் பாடசாலை உபகரணங்கள் அடங்கிய பொதிகளை அன்பளிப்புச் செய்ய யுனிசெப் நிறுவனம் முன்வந்துள்ளது.

இதனை அடுத்து ஆண்டு ஒன்று முதல் 12 வரை கல்வி கற்கும் — இடம்பெயர்ந்தோர் முகாம்களில் உள்ள — மாணவர்களின் விபரத்தை அனுப்பி வைக்குமாறு கொழும்பில் தற்போது தங்கியுள்ள யாழ். அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தை கோரியுள்ளார்.

இணையத்தினால் முகாம்களில் உள்ள 11 ஆயிரத்து 600 மாணவர்களின் விபரப் பட்டியல் தற்போது கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவ் உபகரணங்கள் அடங்கிய பொதிகள் விரைவில் இங்கு வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (த-103)

சீருடை

சாவகச்சேரி நகரசபை பணியாளர்களுக்கு 1994 ஆம் ஆண்டுக்கான சீருடைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பத்து வருடங்களின் பின்னர் முதன்முறையாக இவ்வாண்டு சீருடை வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது

புலிகளின் குரல் வானொலியில்

04—04—1994
திங்கள் இரவு
★ 8-01 — அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி "தமிழ் சமுத்திரம் பூபதி"
★ 8-10 — தாயகப் பாடல்கள்
★ 8-20 — செய்திச்சாரம்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — நிச்சயம் — ஒரு நல் கடற்தொழிலாளர் சிறந்த தலைவர் அவர்களுடனான செவ்வி

05—04—1994
செவ்வாய் காலை
★ 7-00 — மாவீர வணக்கம்
★ 7-10 — அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி "அணையாததீபமாக நீயே"
★ 7-25 — இன்றைய தாரகை
★ 7-45 — செய்திகள்
★ 7-50 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-55 — தாயகப் பாடல்

தபாலகம் இயங்கும்

கடந்த இரண்டு வருடங்களாக இயங்காமல் இருக்கும் பூநகரி கௌதாரிமுனை தபாலகத்தை பூநகரி [illegible] என்ற இடத்தில் இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக கௌதாரிமுனை தபாலக அதிபர் திருமதி வே. தர்மினி தெரிவித்தார்.

இந்திய மாநிலங்களைவிட இப்போதே மாகாண சபைகளுக்குக் கூடுதல் அதிகாரம்!

சமாதானப் பேச்சு நடந்தால் சமஷ்டித் தீர்வு வரும் ஆபத்து

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று ஏற்படக் கூடாது என்பதில் சிங்கள - பௌத்த பேரினவாதம் எவ்வாறு விழிப்பாகவும், தீவிரமாகவும் செயற்படுகிறது என்பதற்கு இந்தக் கட்டுரை ஓர் நல்ல எடுத்துக் காட்டாகும்.

அவர்களின் உள்ளக்கத்தை தமிழர்களும் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக இக் கட்டுரையை மறுபிரசுரம் செய்கிறோம்.

"ஜாதிக சிந்தனைய" (தேசிய சிந்தனை) என்ற பேரினவாத இயக்கத்தின் தலைவர் பேராசிரியர் நளின் டி சில்வா எழுதிய இக்கட்டுரை 30-3-94ஆம் திகதிய "திவயின" சிங்களப் பத்திரிகையில் வெளியாகி இருந்தது.

மக்களின் கவனம் தென் மாகாண சபைத் தேர்தலின் பால் திரும்பியுள்ள இந் நேரத்தில் சமாதானப் பேச்சுவார்த்தை என்ற 'லொறி' வண்டியில் இன்னும் பலர் ஏறிக் கொண்டிருக்கிறார்கள். சிங்கள இதிகாசங்கள் பற்றிப் பேசாதிருக்கும் கிறிஸ்தவ சபை (Church) மற்றும் கிராமங்களின் பிரிவு செய்யப்பட்ட ஒளிப்பதிவு நாடாவைக் கொண்டு வந்த சர்வோதயத் தலைவர் ஆரியரத்ன, தொண்டமான் ஆகியோர் வண்டியில் ஏறியுள்ளார்கள்.

தொண்டமான் இம்முறை கனடா செல்ல ஆயத்தமாகிறார். அவரின் கூற்றுப்படி, கனடாவின் [illegible] நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து அவருக்கு அழைப்பும் கிடைத்துள்ளது.

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தும் அவசியம் கனடாவுக்கு எங்கும் ஏற்படவில்லை. நோர்வே, பிரிட்டன் ஆகிய நாடுகளும் அதில் கரிசனை காட்டுகின்றன.

பிரச்சினையை ஏற்படுத்தியவர்களே, பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எடுத்துள்ள முயற்சி குறித்து நாம் திருப்திப்பட முடியாமல் இருப்பதன் காரணம் அவர்கள் தீர்வின் மூலம் நாட்டுக்கு மேலும் பிரச்சினையை ஏற்படுத்துவதாகவே அமையும்.

இவர்களின் சமாதானப் பேச்சுகளில் கவனத்தை ஈர்த்திருப்பது சமஷ்டி முறையிலான தீர்வாகும்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கையின் படியும் ஐ. தே. க., ஸ்ரீ.ல.சு.க. ஆகியன சமஷ்டித் தீர்வுக்கு ஆதரவு காட்டுவதில்லை. எனினும் அதுபற்றி அவர்கள் நேரடியாகச் சொல்லவில்லை. அதற்குப்பதிலாக அவர்கள் இந்தியாவின் பிராந்தியங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளவாறு அதிகாரம் வழங்கப்படும் என கூறியுள்ளார்கள்.

தெரிவுக்குழு சிபார்சுகள்

1994 ஜனவரி 16ஆம் திகதி (வெளியிடப்பட்ட அறிக்கையின் பிரகாரம் பங்காளர்களான இக் குழுவின் முக்கியஸ்தர்கள் நான்கினை அரசு ஏற்றுக்கொள்ள முடிவு செய்துள்ளது. அந்த நான்கு விடயங்களும் வருமாறு:

1. இணைக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்கு மாகாணங்கள், பிரிக்கப்பட்டு தனித்தனி நிர்வாகங்கள் ஏற்படுத்தப்படுதல்.
2. இந்திய அரசமைப்புக்கு ஏற்ப அதிகாரங்களைப் பகிர்தல்.
3. இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் உள்ள சில விடயங்களை மாகாண சபைகளுக்கு அளித்தல் அல்லது இந்தப் பட்டியலை முற்றாக நீக்கிவிடுதல்.
4. கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துதல் — என்பனவாகும்.

இவற்றுள் நான்காவது விடயம் மட்டுமே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இரண்டாவது மூன்றாவது விடயங்களை முதலில் நடைமுறைப்படுத்தாமல் இருப்பதற்கு சமாதானப் பேச்சு வார்த்தைக்கான நோக்கத்தைக் காண்பதற்காகவே.

"ஈழம்" கொடுக்கப்பட மாட்டாதென அரசு சொல்கிறது. ஐக்கிய தேசியக் கட்சியும் சரி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் சரி சமஷ்டி முறை பற்றிப் பேசவில்லை. அவர்கள் கதைப்பது இந்தியமுறை பற்றியே. எனினும் அவர்களுக்கு ஆலோசனை கூறுபவர்கள் சமஷ்டிபற்றி எண்ணம் கொண்டிருக்கிறார்கள்; அறிக்கை விடுகிறார்கள்.

1982ஆம் ஆண்டு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்ட போது, வாக்குத்தேர்தலைத் தவிர்ப் போடவேண்டாம் எனக்கோரி பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் அறிக்கை விடுத்தபோது, அதில் கையொப்பமிட மறுத்தவர்கள் இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு சமஷ்டித் தீர்வு பற்றி ஆலோசனை கூறி பத்திரிகைகளில் எழுதுகிறார்கள். ஆனாலும் அவர்கள் சமஷ்டி என்ற சொல்லை உபயோகிப்பதில்லை. இந்திய பிராந்திய அதிகாரம் என்றே கூறுகிறார்கள்.

சமஷ்டியா, ஒற்றையாட்சியா என்பதை [illegible] அரசமைப்பு மூலம் தெரிந்து கொள்ள முடியாது. [illegible] என்று சொல்லிக் கொண்டே அதிகாரங்களை சமஷ்டிமுறையில் பிரித்துக் கொடுக்க முடியும்; அதிகாரத்தை மாகாண, பிராந்திய சபைகளூடாக பிரயோகிப்பது வேறு. அதிகாரங்களை இச்சபைகளுக்கும் கையளிப்பது வேறு.

மத்தியில் எவ்வளவு அதிகாரம் இருக்கிறது என்பதை வைத்தே சமஷ்டியா, ஒற்றையாட்சியா எனக் கூறமுடியும். பிராந்திய, மாகாண சபைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு இருக்க வேண்டும். பிரதேச சபைகள் சட்டமியற்றலாம். ஆனால் அவை நாடாளுமன்ற சட்டங்களுக்கு மேலாகப் போகக்கூடாது.

பதின்மூன்றாவது திருத்தம்

அரசியலமைப்புக்கு 13ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்ட போது மேல் நீதிமன்ற நீதிபதிகள் 9 பேரில் 4 பேர் இது அரசியலமைப்பின் ஒற்றையாட்சி முறைக்கு ஏற்றதாக இல்லை எனத் தீர்ப்பளித்தனர். இது சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்பட வேண்டுமெனக் கூறினர்.

வரதராஜப் பெருமாள் வடக்கு-கிழக்கை தனிநாடாக பிரகடனம் செய்தது மாகாண சபை மூலமாகத்தான்.

இப்போதைய நிலை இப்படி இருக்கும் போது, நடைமுறைப்படுத்தப்பட எதிர்பார்க்கப்படும் யோசனைகள் நாட்டின் சமஷ்டி ஆட்சியை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை

"ஜாதிகசிந்தனைய" தலைவர் போர்க்கோலம்

இந்திய மாநில சபைகளிலும் பார்க்க கூடுதலான அதிகாரம் வேண்டும் என்றே இன்று கேட்கப்படுகிறது. இப்போது மாகாண சபைகள் அமைக்கப்பட்டிருப்பதே இந்திய முறையில் தான்.

இதன்படி நாடாளுமன்றத்துக்குட்பட்ட விடயங்கள் ஒரு பட்டியலாகவும், மாகாண சபைகளுக்குட்பட்ட விடயங்கள் மற்றொரு பட்டியலாகவும் இரண்டுக்கும் பொதுவான விடயங்கள் வேறொரு பட்டியலாகவும் இடப்பட்டுள்ளன. இவற்றுள் பொதுவான பட்டியலில் குறிப்பிடப்பட்ட [illegible] மாகாண சபைகளுக்கான விடயங்களில் நாடாளுமன்றம் தலையிட முடியாது. அந்த விடயங்களை மாகாண சபைகளுக்கு கையளிக்க மக்களின் விருப்பு, வெறுப்பு கேட்கப்படவில்லை. அதன் மூலம் மக்களின் அடிப்படை உரிமைகள் நாடாளுமன்றத்தினால் வேறு அமைப்புகளுக்குக் கையளிக்கப்பட்டுள்ளன. மக்களால் மக்கள் பிரதிநிதிகளுக்கு அந்த அதிகாரம் தரப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்ட வேண்டும்.

அதிக அதிகாரம்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முன்னர் மாகாண சபை முறையை எதிர்த்ததன் காரணம் அதுதான். ஆனால் இன்று நிலைமை அப்படி இல்லை. திருமதி சந்திரிகா குமாரணதுங்கவின் செல்வாக்கு காரணமாக அன்று தாங்கள் எதிர்த்தவற்றை மறந்து மாகாண சபைகளுக்கு கூடிய அதிகாரங்கள் தரப்படவேண்டுமென சம்மதம் தெரிவிக்கின்றனர்.

இந்திய மாநில சபைகளிலும் மேலான அதிகாரங்களை மாகாணசபைகளுக்கு அளித்து மக்களின் அடிப்படை உரிமையை நசுக்கிய ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் வால் பிடிக்கின்றனர்.

மகாநாயக்க தேரர்களை யாழ்ப்பாணம் வருமாறு கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அழைப்பு விடுத்திருப்பது இங்கு மற்றுமொரு அபாயமாகும்.

1988இற்குப் பேச்சுவார்த்தையிலிருந்து புலிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளிலிருந்து ஒரேயொரு விடயம் புலனாகிறது. அதாவது அவர்கள் தம்பக்கத்திருந்தவர்களை விடவும் போராட்ட சக்தியை அதிகரிப்பதற்காக காலத்தை எடுப்பதே அவர்களின் நோக்கமாகும்.

பிரித்தானிய அரசு ஐரிஷ் கெரில்லாக்களுடன் பேச்சு நடத்தவில்லை. அவர்கள் வன்முறையைக் கைவிட்டு ஆயுதங்களைத் தரையில் வைத்தால் மட்டுமே பேச்சுவார்த்தை என பிரித்தானிய அரசு கூறுகிறது.

ஆயர் செய்ய வேண்டியது

அங்கிலிக்கன் திருச்சபை ஆயர் கெனத் பெர்னாண்டோ யாழ்ப்பாணம் செல்வதற்கு முன்னால் கன்ரபரி பெரிய ஆயருடன் இணைந்து ஐரிஷ் கெரில்லாக்களுடன் நிபந்தனையின்றிப் பேச்சுவார்த்தை நடத்துமாறு பிரித்தானிய அரசை வற்புறுத்த வேண்டும். கென்ரபரி ஆயர் பெல்பாஸ்ட் நகரத்துக்கோ அல்லது டப்ளின் நகருக்கோ செல்லாதது ஏன் என அங்கிலிக்கன் ஆயர் தெரிவிப்பாரா? நாங்கள் அறிய விரும்புகிறோம்.

இலங்கையிலுள்ள பல்வேறு கிறிஸ்தவ, கத்தோலிக்க அமைப்புகள் சிங்களத் தலைவர்களைக் கைவிட்டுவிட்டன என்பது கவலை தரும் விடயம்.

சிங்கள கிறிஸ்தவர்களை கிறிஸ்தவ, கத்தோலிக்க அமைப்புகள் கைவிட்டதைப் போன்று சிங்களவர்களுக்காகப் பேசிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இன்று சிங்களவர்களை மறந்துவிட்டது. இன்று நடைமுறைப்படுத்தப்படும் திட்டம் மிக வெளிப்படையானது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் சிபார்சுகளை நடைமுறைப்படுத்த அரசுக்கு நெருக்குதல் இருக்கிறது. அரசும் அதனைச் செயற்படுத்த ஆயத்தமாக உள்ளது.

ஜனாதிபதி விஜேதுங்கா ஈழம் கொடுக்கப்படமாட்டாது என்றே கூறிவருகிறார். சமஷ்டி கொடுக்கப்படமாட்டாது எனக் கூறவில்லை (சமஷ்டி கொடுக்கப்பட்டால் ஈழம் கொடுக்க வேண்டிய அவசியம் வராது அது ஏற்படுமானால் சம்பந்தப்பட்ட பிரச்சினையாகவே இருக்கும்)

எனினும் சமஷ்டித் தீர்வு ஏற்படுத்துவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் இணங்கினால் மட்டுமே இயலும். இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அத்தகைய தீர்வுக்கு உடன்பாடாகவே உள்ளது.

சந்திரிகா குமாரணதுங்கவும் அது போலவே சில பத்திரிகைகளும் இதனை விட்டுப் பெரிதாக நடவடிக்கை எடுத்து வருகின்றன. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இதற்கு இணங்கியதன் காரணம் இந்நாள் வரை ஆட்சியின் வாக்குகளைப் பெற்று தேர்தலில் வெல்லலாம் என்ற நோக்கிலேயே. எனினும் கிழக்கு மாகாண தேர்தல் காட்டுவது வேறு.

ஐக்கிய தேசியக்கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் சேர்ந்து சமஷ்டி முறை தீர்வுக்கு இணங்கினால் அதைத் தோற்கடிப்பது சிரமம் எனினும் சிங்கள மக்களுக்கு போராட்டங்களில் நாம் வென்றதை வரலாறு காட்டும்.

மாகாண சபைகள் மூலம் கொண்டுவரப்படும் சமஷ்டி முறையை எதிர்ப்பதற்கு முதலில் செய்ய வேண்டியது என்ன வெளிச் சக்திகளாகப் பத்திரிகைகள், உபதேசிகள் உட்பட சிங்கள மக்களின் உரிமை [illegible] மடுவோரையும் பிரமுகர்களையும் இனங்காணுவது தான்.

★

கட்டுரைக்கு 'திவயின' பத்திரிகை எழுதிய பெட்டிக் குறிப்பு பின்வருமாறு:

கனர் மூன்று வருடங்களுக்கு முன்புதொடக்கி— மெதடிஸ்தசபை சோமா பெரேரா, துலிப் பெர்னாண்டோ, அங்கிலிக்கன் திருச்சபை ஆயர் கெனத் பெர்னாண்டோ, கத்தோலிக்க திருச்சபையின் [illegible], நீக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ ஆகிய பாதிரிமார்களும் — பள்ளிநாயவைச் சேர்ந்த மாதம்பாகம அஸ்ஸஜி தேரர் போன்ற பிக்குகளும் —

சர்வோதய ஆரியரத்ன, புனருத்தாபன ஆணையாளர் ஆனந்த சேர ஆகிய பிரமுகர்களும் பல்வேறு சமாதான தூதுக்களை மேற்கொண்டனர்.

தற்போது [illegible] என அழைக்கப்படும் கிறிஸ்தவ அமைப்பு பிக்குமார் குழு ஒன்றை யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்கின்றது. இதுதொடர்பாக அந்த அமைப்பின் பிரதிநிதிகள் பௌத்த கோயில்களுக்குப் போய் வந்த வண்ணம் இருக்கிறார்கள்...

காடழிப்பு என்பது நாடழிவின் கட்டியம்

ஸ்ரீதர் திரையரங்கில் இன்று முதல்
தினசரி மாலை 4-00 மணி 6-00 மணி
சனி, ஞாயிறு காலை 10-30 பிற்பகல் 2-30
மாலை 4-00 மணி 6-00 மணி;
YOUNG DRAGONS
THE - KUNG - FU - KIDS
(கலர்)
(30230)

மரண அறிவித்தல்கள்

அப்பாப்பிள்ளை தர்மலிங்கம்

பண்ணாகத்தைச் சேர்ந்த அப்பாப்பிள்ளை தர்மலிங்கம் 3 – 4 – 94 அன்று ஞாயிற்றுக்கிழமை காலமானார். இவர் சின்னம்மாவின் அன்புக் கணவரும், முன்னைநாள் எதிர்க்கட்சித் தலைவர் காலஞ்சென்ற அமிர்தலிங்கம் (சட்டத்தரணி), சொக்கலிங்கம் (பிரசித்த நொத்தாரிசு), பிரபல வர்த்தகர் வாசுதேவலிங்கம் (மேமா ஸ்ரோர்ஸ்), சிதம்பரலிங்கம் (B Sc. லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்லம்மா, ஆறுமுகசாமி (சமாதான ப. நோ. கூ. சங்கம்), இலட்சுமிப்பிள்ளை, சிவபாக்கியம் (குடும்ப நல சேவையாளர் M. O. H மானிப்பாய்), பரமசிவம் (கீர்த்தா அச்சக உரிமையாளர் சங்கானை) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பொன்னுத்துரை, ஈஸ்வரி, சிவமயம் (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகஸ்தர்), சற்குணசிங்கம் (ப. நோ. கூ. சங்கம் சமாதான முன்னைநாள் தலைவர்), சிவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும், தயாளினி, சுதர்சினி, மோகிதா, லவன், பவன், தாசன், கீர்த்தா, நிஷாந்தி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (4-4-94) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருவடிநிலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

தகவல்:
த. ஆறுமுகசாமி
பண்ணாகம். (30229)

திருமதி கந்தையா நாகம்மா

மாவத்தை, அளவெட்டி வடக்கைச் சேர்ந்த திருமதி கந்தையா நாகம்மா 03-04 94 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. எஸ். என். கந்தையாவின் [மலாயன் பென்ஷனர்] அன்பு மனைவியும், துரைராசா [ஓய்வுபெற்ற மக்கள் வங்கி உத்தியோகத்தர்], தியாகராசா [U. K.], சுந்தரலிங்கம் [U. K.], சிவலிங்கம் [Australia], புனிதவதி ஆகியோரின் அன்புத்தாயாரும், சோதிமலர், விக்கினேஸ்வரி, சிவகுமாரி, விமலாதேவி [Australia], தவரத்தினம் [சட்டடக் கலைஞர், கொழும்பு] ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெகதீபன் [U. K.], விஜிதா, மயூரன் [U. K.], சங்கீதா, துவாரகா (மாணவிகள், கொழும்பு கொட்டாஞ்சேனை, மகளிர் கல்லூரி), கவிதாசினி, சுதர்சினி [U. K.], மதனகோபால் [U. K.], நிஷாந்தன் (மாணவன், கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி), சிவசங்கர் [Australia], அம்பிகா [Auitralia], இந்திரஜித் [U. K.], அஞ்சனா, பிரசாந்தன் (மாணவர்கள் யா/மகாஜனாக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04-04-1994) திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு, சரஸ்வதி வாசா, 82 சினியர் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

தகவல்
க. துரைராசா
(மகன்)

" சரஸ்வதி வாசா "
82, சினியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (30226)

திருமதி ராசரத்தினம் சபாபதி

பொன்னையா ஒழுங்கை, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த திருமதி ராசரத்தினம் சபாபதி 20-03-94இல் லண்டனில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சாம் சபாபதியின் அன்பு மனைவியும், டாக்டர் நளாயினி (U S A.) வினோதினி (சட்டத்தரணி), மாலினி (U K), டாக்டர் பிரமளா (U.K.), கணேஸ் (லீனா U.K.), ராஜி (U K) ஆகியோரின் அன்புத் தாயாரும், டாக்டர் R K சிறிஸ்கந்தராஜா (ராஜன் U S A.), டாக்டர் சரத் அமரசேகர, டாக்டர் M S ஈஸ்வரன் (U K.), டாக்டர் M. சந்திரகுமார் (U K) M. கனகதேவன் (U K) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெற்றன.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
திருமதி வி. அமரசேகர
3/1, பார்க் அவனியு.
கொழும்பு – 8. (30227)

திருமதி சிவசுப்பிரமணியம் நாகம்மா

அளவெட்டி தெற்கைச் சேர்ந்த நாகம்மா 3-4-94 அன்று காலமானார் அன்னார் சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், மனோகரன் ஸ்ரீதேவி, ஜெயதேவி, ரோகிணி, வத்சலா (காலஞ்சென்ற) ஆகியோரின் அன்புத் தாயாரும், விமலாதேவி (கனடா), மாணிக்கவாசகர், மகேந்திரன் ஆகியோரின் அருமை மாமியாரும் ஆறுமுகம், பாக்கியலஷ்மி (கனடா), ஞானலட்சுமி (லண்டன்), குலசிங்கம் (அவுஸ்), தனலக்சுமி, குணசிங்கம் (அவுஸ்) ஆகியோரின் சகோதரியும், இராசமலர் (காலஞ்சென்ற), அரசரட்ணம், சிவநாயகி, மகேந்திரலிங்கம், ரஞ்சினி, ஆகியோரின் மைத்துனியும், கலைமகள், பூமகள், மகாபரன், வித்தியாரூபி, ரவிப்பிரியா, துவாரகா, தர்மேஷ் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று [4-4 94] நடைபெறும் என்பதை உற்றார், உறவினர்களுக்கு அறியத்தருகிறோம்.

[7054]
தகவல்:-
(கணவர்)

இன்று

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள வலயம் இரண்டில் உள்ள ஆசிரியர்களுக்கான உளநல பயிற்சித் தொடரின் இரண்டாம் கட்டப் பயிற்சி நெறிக்கான நேர்முகத் தெரிவு இன்று இராமநாதன் கல்லூரியில் நடைபெற உள்ளது. (த-182)

ஆலயங்களில்

ஆனைக்கோட்டை புளியங்கன்று பிள்ளையார் கோயில் உற்சவத்தில் நாளை மறுதினம் புதன் மாலை 5 மணிக்கு விசேட ஆராதனை அபிஷேகங்களும் அதனைத் தொடர்ந்து விநாயகர் வீதியுலாவும் இடம்பெறும். இரவு விசேட தவில் கச்சேரியும், இன்னிசைக் கச்சேரியும் இடம்பெறும். (த)

★ ★ ★

வலி. கிழக்கு அத்தியடி அருள்மிகு ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும். (த)

★ ★ ★

சாவகச்சேரி விறுமர் ஆலயத்தின் வருடாந்த வேள்வி உற்சவம் நாளை செவ்வாய் விசேட அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெறும்.

இந்த மண்ணை ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கலைக்கழகத்தின் தலைவராகப் பதவியிலிருந்து, அவர் எமது மண்ணுக்கு ஆற்றிய சேவை மகத்தானது. அதற்காக ஈழத்தமிழ் உலகம் அவருக்கு என்றும் கடமைப்பட்டிருக்கும்.

தேசப்பற்றாளர்

பேராசிரியர் துரைராசா அவர்கள் ஒரு தேசப்பற்றாளர். அவர் இந்த மண்ணையும், மக்களையும் ஆழமாக நேசித்தார். அவரது வாழ்க்கை இந்த மண்ணோடு பிணைந்தது; மக்களோடு இணைந்தது. அவர் இந்த மண்ணினதும் மக்களினதும் போராட்ட வாழ்வுடன் ஒன்றிணைந்து நின்றார்; போராட்ட வாழ்வின் பளுக்களை சுமந்து கொண்டார்; போராடும் மக்களின் துன்பங்களை பகிர்ந்து கொண்டார்.

எத்தனையோ அவலங்கள், துன்பங்கள் மத்தியிலும், எதற்கும் அஞ்சாத துணிவுடன் இந்த மண்ணைப் பற்றி நிற்கும் எமது மக்களுக்கு பேராசிரியர் துரைராசா அவர்கள் ஓர் ஊக்க சக்தியாக விளங்கினார். தளர்ந்து போகாத உறுதிப்பாட்டிற்கு ஓர் சிறந்த உதாரணமாக விளங்கினார்.

எமது இனத்தின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் கல்வி ஆதாரமானது; எமது சமூகத்தின் முன்னேற்றத்துக்கு அத்திவாரமானது. நீண்ட காலமாகவே, எமது கல்வி வாழ்வை சிதைத்துவிட எதிரியானவன் முனைந்து வருகிறான். இதனால், தமிழரின் கல்வி பாரதூரமான அளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கிறது.

பாராட்டுக்குரிய
தொண்டாற்றியவர்

சரிந்துகொண்டிருக்கும் எமது கல்வித்துறையை நிமிர்த்திவிடவேண்டும் என்ற இலட்சியத்துடன் பேராசிரியர் துரைராசா அவர்கள் அரும்பாடுபட்டார். எத்தனையோ இடையூறுகளுக்கும் மத்தியில் துணிந்து செயலாற்றினார். எதிரியின் போர் அழுத்தங்களாலும், அனர்த்தங்களாலும் யாழ்ப்பாண உயர்கல்விபீடம் செயலிழந்து போகாத வண்ணம் அவர் ஆற்றிய அருந்தொண்டு மிகவும் பாராட்டுக்குரியது. இது அவரது தேசப்பற்றிற்கும் மக்கள் நேயத்துக்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

பேராசிரியர் துரைராசா ஓர் எளிமையான மனிதர்; ஓர் இனிமையான மனிதர். எளிமையும் இனிமையும் இணைந்த ஒரு நல்ல மனிதர். அறிவின் அதியுயர்ந்த பண்பாக பிறப்பதுதான் எளிமை, தன்னலமும், தற்பெருமையும் அற்ற நற்பண்பாக எளிமை தோன்றுகிறது. இந்த எளிமை ஒருவரை அழகானமனிதராக, பண்பான மனிதராக ஆக்கிவிடுகிறது. இந்த வகையில் பேராசிரியர் துரைராசா ஓர் அழகான மனிதர். அவரிடமுள்ள இந்த அகத்தின் அழகுதான் மக்களனைவரும் மாண்பாக விளங்குகிறது.

அவரது நற்பணி தொடரவேண்டும் என்றும், அவர் நல்வாழ்வு வாழவேண்டும் என்றும் நான் மனமார வாழ்த்துகிறேன். — என்று தெரிவித்தார். (வ)

செப்ரீசீமியா:
நேற்றும் இருவர் மரணம்

யாழ்ப்பாணம், ஏப். 4

செப்ரீசீமியா நோய்த் தாக்கத்திற்குள்ளாகி நேற்றும் இருவர் யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார்கள்.

புலோலி தெற்கைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை பரமேஸ்வரி [வயது 30] துன்னாலை வடக்கைச் சேர்ந்த குணேஸ்வரன் அம்பிகா [வயது 10 மாதம்] ஆகிய இருவருமே உயிரிழந்தவர்கள் ஆவர்; [ஒ-15]

சர்வமத...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாண்டோ, வெதடிகே திருச்சபைத் தலைவர் வண. இங்கிலி முதல்வர் ஆகியோர் பௌத்த பிக்குகளுடன் பேச்சு நடத்தினர்.

அரசாங்கத்துக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக சமாதானச் சூழ்நிலை ஒன்றை உருவாக்க வேண்டிய அவசியம் குறித்து பௌத்த பிக்குகளுக்கு விளக்கி கூறப்பட்டதாகவும்—

பிக்குமார் யாழ்ப்பாணம் செல்ல தமது சர்வமதக் குழு உதவமுடியும் என்று அவர்களுக்கு கூறப்பட்டதாகவும்— மேலும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் சென்று அங்குள்ள மக்களின் நிலைமை அறியத் தாங்கள் விரும்புவதாகவும்—

தங்களது உயர் பீடத்துடன் இது பற்றி கலந்து பேசி முடிவு தெரிவிப்பதாகவும்—

சந்திப்பில் கலந்து கொண்ட பிக்குகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாம்.

சர்வமதக் குழுவினர் மீண்டும் இவ்வாரம் பிக்குமாரைச் சந்திக்க விருக்கின்றனர். (உ-8)

நேர்முகப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கத்தில் வடக்கு - கிழக்கு மாகாணசபை அதிகாரிகளால் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சை குறித்து கிடைத்த முறைப்பாடுகளையடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக மாகாண கல்வி அமைச்சுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில், அவ்வேளை பாடசாலைகளில் தற்காலிக சிற்றூழியர் கடமைகளில் இருந்த 52 பேருக்கு மட்டுமே நிரந்தர நியமனம் வழங்கப்பட்டதாகவும்—

ஏனையோரின் நேர்முகப் பரீட்சை முடிவுகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ-3)

கிழக்கில் தெரிவான
உள்ளூராட்சி உறுப்பினர்கள் இன்று பதவியேற்பர்!

கொழும்பு, ஏப். 4

கிழக்கிலும், வவுனியாவிலும் அண்மையில் நடைபெற்ற தேர்தல்களில் தெரிவான— உள்ளூராட்சி மன்றங்களின்— உறுப்பினர்கள் 404 பேர் இன்று பதவி ஏற்கவுள்ளனர்.

இன்று நடைபெறவுள்ள பதவியேற்பு வைபவங்களில் கலந்து கொள்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று கிழக்கிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

உள்நாட்டு அலுவல்கள் மாகாணசபைகள் அமைச்சர் ஜோன் அமரதுங்க வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ஏ. ஆர் மன்சூர், வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் லயனல் பெர்னாண்டோ ஆகியோரும் அங்கு செல்லவுள்ளனர். (உ-5)

பொருள்களுடன் 'கோமாரி' நாளை மறுதினம் வரும்

யாழ்ப்பாணம், ஏப். 4

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் "கோமாரி" கப்பல் நாளை மறுதினம் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று கொழும்பில் இருந்து வடக்கு நோக்கிப் புறப்படும் இக்கப்பலில் 2 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி, 950 மெற்றிக் தொன் சீனி, 200 மெற்றிக் தொன் மைசூர் பருப்பு உட்பட மற்றும் உணவுப் பொருள்களும் எடுத்து வரப்படுகின்றன.

தற்சமயம் கொழும்பில் ஒரு தொகுதி சரக்கை [illegible] ஏற்றிக் கொண்டிருக்கும் "மாஹோ" கப்பல் 10 ஆம் திகதியளவில் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-8)

கோமல் சுவாமி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தனது நாடக பட்டறை நிகழ்வில் கலந்து கொள்ளும் அவர், கலைஞர்கள் பலரையும் சந்திப்பார்.

இந்நிகழ்வுக்கு யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீடத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமை வகிப்பார்.

மாலை 3 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். பொது வரவேற்பில் "தமிழ் இலக்கியத்தில் நிகழ்வுகளும் எதிர்பார்ப்புகளும்" என்ற தலைப்பில் அவர் விரிவுரை நிகழ்த்துவார். இந்நிகழ்வினை தேசிய கலை இலக்கிய பேரவையும், பல்கலைக்கழக தமிழ் மன்றமும் ஏற்பாடு செய்துள்ளன.

மேற்படி வரவேற்பு விழாவுக்கு பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமைவகிப்பார்; வரவேற்புரையை திரு. க. தணிகாசலமும், தொடக்கவுரையை விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரையும் நிகழ்த்துவர்.

இந்தியாவில் பல விருதுகளைப் பெற்ற "தண்ணீர் தண்ணீர்", "ஒரு இந்தியக் கனவு" போன்ற திரைப்படங்களின் கதாசிரியர் கோமல் சுவாமிநாதன் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-ஒ)

யாழ்-கிளாலி
பஸ் கட்டணம் குறைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 4

கிளாலி - யாழ்ப்பாணம் பஸ் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.

இதுவரை 150 ரூபாவாக அறவிடப்பட்ட பயணக்கட்டணம் 100 ரூபா ஆக குறைக்கப்பட்டுள்ளது;

பொதுமக்களின் நன்மை கருதியே இக்கட்டண குறைப்பு மேற்கொள்ளப்பட்டதாக யாழ் மாவட்ட சிற்றூர்தி சேவைச் சங்கங்களின் இணைத் தலைவர் திரு. அ. அமிர்தராஜா தெரிவித்தார். (இ-162)

பேச்சு மூலம்......

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சபையில் கடந்த திங்களன்று உரையாற்றும்போது அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயங்கரவாதக் குழு என்று அழைப்பது பொருத்தமானதல்ல.

உண்மையில் அவர்கள் தேசிய விடுதலை இயக்கத்தினரே.

திட்டமிட்ட முறையில் தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறைகள், பாரபட்சங்களின் விளைவாகவே அவர்கள் ஆயுதம் ஏந்த வேண்டிய நிர்ப்பந்தம் உருவானது.

விடுதலைப்புலிகள் இயக்கம் தோன்றியதற்கான பொறுப்பை தொடர்ச்சியாக இலங்கையில் பதவியிலிருந்த அரசாங்கங்களே ஏற்க வேண்டும்.

கொடூரமான இப்போருக்கு முடிவு ஒன்றைக் கொண்டுவர ஸ்ரீலங்கா அரசாங்கம் அதன் பங்கை உரிய முறையில் ஆற்ற வேண்டும்.

இனவாத நோக்கம் கொண்ட சிங்கள அரசியல்வாதிகளின் செயலினால் சிங்கள மக்கள் விரக்தியடைந்து வருகிறார்கள்.

சமாதான-நியாயமான— தீர்வு ஒன்றைக் காண்பதிலேயே சிங்கள மக்கள் இப்போது பெரிதும் அக்கறை கொண்டுள்ளனர்.

போரினால் பாதிக்கப்பட்ட —குறிப்பாக வடபகுதியில் உள்ள மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்க வேண்டும்.

யாழ். போதனா வைத்திய சாலைக்கு [illegible] வைத்திய உபகரணங்களை வாங்குவதற்கு நிதி திரட்டப்பட வேண்டும் — என்றார் அவர். (உ-8)

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
பொதுச்சபைக் கூட்டம்
யாழ். மாவட்டம்

தனியார் கல்வி நிறுவன பொதுச் சபைக் கூட்டம் எதிர்வரும் 06-04-94 புதன்கிழமை பிற்பகல் 3 00 மணிக்கு எழிலகத்திற்கு முன்பாக அமைந்துள்ள புதிய விஞ்ஞானக் கல்விக் கழகத்தில் நடைபெறும்.

அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

பொதுச் செயலாளர்
தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
(இ/7674)

அரிய சந்தர்ப்பம். ,.. தவறவிடாதீர்கள்
எதிர்வரும் புத்தாண்டை முன்னிட்டு
எழினி புடவை வாணிபத்தினரின்
• மாபெரும் மலிவு விற்பனை •
காலம்: 03 - 04 - 1994 --- 04 - 04 - 1994 வரை
இடம்: சிவன் கோவிலுக்கு அருகில் பிரதான வீதி,
பருத்தித்துறை.
வியாபாரிகளின் தேவைக்குரியதும், தையல் நிலையத்தினருக்கானதும்,
சிறியோர் முதல் பெரியோர் வரையான உடைகளும்
இதில் அடங்கும்
** வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு **
************ எழினி ************
புடவை வாணிபம்
பெரியகடை, (7653) யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 293/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 04 - 04 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.